# வெற்றிடங்கள்

## திட்ட ஊழியரின் ஆட்சேர்ப்பு

**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP) - கட்டம் II**

**திட்டக் காலம் : 2026 - 2031**

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) 02/2026 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP) – கட்டம் II இற்காக பின்வரும் பதவிகளுக்கு "ஒப்பந்த அடிப்படையில்" திட்ட முகாமைத்துவ ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்ற மற்றும் அர்ப்பணிப்புடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. திட்டத்தின் மொத்தச் செலவு 536.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதோடு, உள்ளூர் மூலங்களில் இருந்து பங்களிப்புப் பெற்றுத்தரப்படுகிறது.

பதவியின் சம்பளம் 2026.03.28 ஆம் திகதிய 02/2026 முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வெற்றிடங்கள்**

| இல | பதவி | சம்பள அளவு | PMU கொழும்பு | PIU – மொரகஹகந்த | PIU - மடாடுகம |
|---|---|---|---|---|---|
| 1 | திட்ட ஆலோசகர் - பொறியியலாளர் - Intermittent (மின் மற்றும் மின் திட்டமிடல்) | Category C | 02 | - | - |
| 2 | சிவில் பொறியியல் | Category D (Engineer - I) | 02 | 03 | 02 |
| | | Category D (Engineer-III) | - | 02 | 02 |
| 3 | சிவில் பொறியியல் (ஒப்பந்த முகாமைத்துவம்) | Category D (Engineer - I) | 01 | - | - |
| 4 | புவி வளங்கள் பொறியியலாளர் | Category D (Engineer - I) | - | 02 | 01 |
| 5 | தொழில்நுட்ப அதிகாரி (இயந்திரவியல்) | Category E | 01 | - | - |
| 6 | தொழில்நுட்ப அதிகாரி | Category E | - | 02 | 01 |

**பொருந்தும் சுற்றுநிருபம்:**

- பிரிவு C – E சம்பள அளவுக்காக MSD சுற்றுநிருபம் 02/2026

விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி மற்றும் அரச ஒழுங்குமுறைகள் தொடர்பில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு கட்டாய முன் தேவைகளாகும். இலங்கை வெளிநாட்டு நிதியிலான வேலையில் அனுபவம் மேலதிக அனுகூலம் ஒன்றாக அமையும்.

அரச சேவையில் தற்போதுள்ள விண்ணப்பதாரர்கள் மேலுள்ள பதவிகளுக்கு தமது திணைக்கள தலைவர் மூலமாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு https://mwsip.lk/careers/ என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்

(மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களுக்கு நிதி அமைச்சின் இணையதளத்தை பார்க்கவும்.)

விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்காக வெவ்வேறாக பதிவுத் தபாலில் 2026.09.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதோடு, விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் - கட்டம் II திட்டம்**
**(மனித வள பிரிவு)**
**இல. 493/1/1,**
**டீ.பி. ஜாயா மாவத்தை**
**கொழும்பு-10.**

குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவர். எந்த வகையான ஆதரவு திரட்டலும் (Canvassing) தகைமை இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

Gazette.lk